சுருக்கம்

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை - அதிக உதவி தேவைப்படும் (High Support Need) மாற்றுத்திறனாளிகள் தங்களுடன் ஒரு உதவியாளரை வைத்துக்கொள்ள உதவித்தொகை வழங்கும் திட்டம் - 2021-2022ம் நிதியாண்டிற்கு திட்ட தொடராணை மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்குதல் - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந.2) த் துறை

அரசாணை (ப) எண்.20

நாள் :28.07.2021
பிலவ, ஆடி 12,
திருவள்ளுவர் ஆண்டு 2052

படிக்க:

1. அரசாணை(ப)எண்.27, மாற்றுத்திறனாளிகள் நலத் (மா.தி.ந.2)த் துறை, நாள்:24.10.2019.
2. மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநரின் கடிதம் ந.க.எண்.3423/அம.இ.4/2021, நாள்.26.04.2021.

******

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் அதிக உதவி தேவைப்படும் (High Support Need) மாற்றுத்திறனாளிகள் தங்களுடன் ஒரு உதவியாளரை வைத்துக் கொள்வதற்காக மாதம் ஒன்றிற்கு உதவித்தொகையாக ரூ.1000/- வீதம் 800 மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கும் திட்டத்தினை 2019-2020ஆம் ஆண்டிற்கு ரூ.96,00,000/- தொடர் செலவினமாக செயல்படுத்திட ஆணையிடப்பட்டுள்ளது. அத்துடன் உதவியாளரை நியமனம் செய்யும் போது வழிகாட்டி நெறிமுறைகளை பின்பற்றுமாறும் மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், அதிக உதவி தேவைப்படும் (High Support Need) மாற்றுத்திறனாளிகள் தங்களுடன் ஒரு உதவியாளரை வைத்துக் கொள்ள உதவித்தொகை வழங்கும் திட்டத்தினை இந்நிதியாண்டிலும் தொடர, திட்டத் தொடராணையும், இச்செலவினத்திற்கென ரூ.96.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்தும் ஆணை வழங்குமாறும் அரசினை கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின், செயற்குறிப்பினை பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, அதிக உதவி தேவைப்படும் (High Support Need) மாற்றுத்திறனாளிகள் தங்களுடன் ஒரு உதவியாளரை வைத்துக் கொள்ள உதவித்தொகை வழங்கும் திட்டத்தினை 2021-2022ம் நிதியாண்டில், தொடர திட்டத் தொடராணையும், இச்செலவினத்திற்கென ரூ.96.00 இலட்சம் (ரூபாய்

தொண்ணூற்றாறு இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடுகிறது. மேலும், இத்திட்டம் தொடர்பான வழிகாட்டி நெறிமுறைகளை தவறாது பின்பற்றுமாறு மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2235 - சமூகப் பாதுகாப்பும் நலனும் 02 - சமூக நலன் - 101 - மாற்றுத்திறனாளிகள் நலன் - மாநிலச் செலவினங்கள் - NI - அதிக உதவி தேவைப்படும் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவியாளர் உதவித் தொகை வழங்குதல் - 309 - உதவித் தொகை - 03 - குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை"
(IFHRMS DPC: 2235 02 101 NI 30903)
(OLD DPC: 2235 - 02 - 101 - NI 0937)

5. மேலே பத்தி 3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத்திறனாளிகள் இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.31110/நிதி(சந)துறை/2021, நாள்.27.07.2021-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆர்.லால்வேனா,
அரசு செயலாளர்.

<u>பெறுநர்</u>
மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர், சென்னை-5.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள்
(மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர் வழியாக)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-35.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை-18.

<u>நகல்:</u>
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
நிதித் (சமூக நலம்/ வ.செ.பொ.II) துறை. சென்னை-9.
இருப்புக் கோப்பு/ உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்